உ

சிவமயம்



யாழ். பருத்தித்துறையில் புலோலியைப் பிறப்பிடமாகவும்,

நோர்வேயில் பேர்கனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

அமரர் திரு. **கதிர்காமு பாலசுந்தரம்**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

# அமரர் திரு. கதிர்காமு பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற புகையிரதத் தலைமைப் பாதுகாவலர்)

விழித்தது

06 * 07 * 1923



உறங்கியது

13 * 07 * 2017

## திதி வெண்பா

ஏரிலங்கும் ஏவிளம்பி ஏமமுறும் யூலையிலே
நேரும் அபரபக்கப் பஞ்சமிதான் - நீறார்
கதிர்காமு பாலசுந்த ரம்தனது காயம்
உதிர்த்த தினமென்றே ஓது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா (அவ்வையார்)

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே (ஞானசம்பந்தர்)

## புராணம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால், வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை(கபிலதேவர்-மூத்ததேவனார் திருஇரட்டைமணிமாலை)

## புராணம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம் (கந்தபுராணம் - கச்சியப்பர்)

## புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
எண்ணிய பொருள் எல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம் (கந்தபுராணம்-கச்சியப்பர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே (திருமூலர்)

## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு (அவ்வையார்)

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே (ஞானசம்பந்தர்)

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே (ஞானசம்பந்தர்)

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.
(ஞானசம்பந்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி யோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே (நாவுக்கரசர்)

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககி லீர்
கொடுமை பலசெய் தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே! (நாவுக்கரசர்)

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே (நாவுக்கரசர்)

## தேவாரம்

பித்தாபிறை சூடீ பெரு மானேயருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே (சுந்தரர்)

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொயம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே (மாணிக்கவாசகர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே (மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே
(திருமாளிகைத்தேவர்)

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே (சேந்தனார்)

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி உமைமண வாளனுக் காம்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே
(சேந்தனார்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே (சேந்தனார்)

## கந்தபுராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம் (கச்சியப்பர்)

## அபிராமி அந்தாதி

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே
(அபிராமிப்பட்டர்)

## அபிராமி அந்தாதி

ஆத்தாளை! எங்கள் அபிராம வல்லியை! அண்டம் எல்லாம்
பூத்தாளை! மாதுளம் பூ நிறத்தாளை! புவி அடங்கக்
காத்தாளை! ஐங்கணைப் பாசாங்குசமும் கரும்புவில்லும்,அங்கை
சேர்த்தாளை! முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே!

(அபிராமிப்பட்டர்)

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே(அபிராமிப்பட்டர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத்து இருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துள் பொருள் ஆவாள்

(பாரதியார்)

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி - காஞ்சி
மாவடி வைகுஞ் - செவ்வேள்
மலரடிபோற்றி - அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

(கச்சியப்பர்)

## கந்தரலங்காரம்

நாள் என் செயும் வினைதான்
என் செயும் எனை நாடி வந்த
கோள் என் செயும் கொடுங்கூற்று
என் செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே
வந்து தோன்றிடினே

(அருணகிரிநாதர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தருபத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தக்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொரு தொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகு பொருள்
பக்சத்தொடு ரக்சித்தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடக்
திக்குப்பரி அட்டப்பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

(அருணகிரிநாதர்)

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

(அருணகிரிநாதர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாயக் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

(மாணிக்கவாசகர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்குமமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

*(அவ்வையார்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராண வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
(கச்சியப்பர்)

தென் நாடு உடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி

நமப் பார்வதி பதையே
அரகர மகா தேவா

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் வாழ்க்கைக்குறிப்பு

அமரர் கதிர்காமு பாலசுந்தரம் நீண்ட ஆயுள் கொண்டிருந்தார். அவர் இந்த மண்ணில் பிறந்ததற்கான நோக்கத்தை நிறைவேற்றிவிட்டு அடுத்த கட்டப் பயணத்தைத் தொடர வேண்டிப் புறப்பட்டபோது அவருக்கு வயது 94.

பாலசுந்தரம் அவர்கள் 1923 ஆம் ஆண்டு ஆடிமாதம் ஆறாம் திகதியன்று இலங்கையிலே, யாழ்ப்பாணத்தில் புலோலி என்ற ஊரிலே உள்ள பண்டாவத்தை என்ற கிராமத்தில் பிறந்தார்.

அவருடைய தந்தையின் பெயர் ஆழ்வார் கதிர்காமு. தாயின் பெயர் சோதிமுத்து (1901) கதிர்காமு- சோதிமுத்து இணையர் ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். மூத்தவரின் பெயர் இராசசிங்கம்(1921), இரண்டாம் பிள்ளையின் பெயர் பாலசுந்தரம்(1923), மூன்றாம் பிள்ளையின் பெயர் அரசம்மா(1925), நான்காம் பிள்ளையின் பெயர் பூரணம்(1928), ஐந்தாம் பிள்ளையின் பெயர் பாலசிங்கம்(1931), ஆறாம் பிள்ளையின் பெயர் வினாசித்தம்பி என்ற சின்னராசா(1933). ஏழாவது பிள்ளை இளவயதிலே இறந்து போயிற்று.

பாலசுந்தரனுக்குப் பன்னிரண்டு வயதாயிருக்கும் போது அதாவது 1935 ஆம் ஆண்டில் கதிர்காமு காலமானார். அப்போது தாயாரான சோதிமுத்துக்கு வயது 34. இரண்டு சகோதரிமாரையும், இரண்டு தம்பிமாரையும் பராமரித்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, பாலசுந்தரத்தின் தலையிலும் தமையனார் இராசசிங்கத்தின் தலையிலும் இடியென வீழ்ந்தது.

பாலசுந்தரத்தின் தந்தையார் ஓயாத உழைப்பாளி, பெரிய பிரயாசி. அதனால் ஒரே சமயத்தில் பல தொழில்களைச் செய்தார். கல்வி அறிவு பெற்றவராயிருந்தும் பெரிய அரசுத் தொழிலில் சேர்வதற்கான வாய்ப்பு அவருக்கு இல்லாது போயிற்று. சில ஆண்டுகள் அவர் அநுராதபுரத்தில் சிறைக்காவலராய்ப் பணியாற்றினார். அவருக்கு அந்த அடிமைத்தொழில் பிடிக்கவில்லை. அதனாலேதான் அவர் பல தொழில்களைச் செய்ய நேர்ந்தது.

கடை நடத்தினார்; செய்தித்தாள் விநியோகம் செய்தார்; வயல் செய்தார்; ஆடு மாடுகள் வளர்த்தார்; வண்டில் மாடு வைத்துப் போக்குவரத்துச் சேவை புரிந்தார். இவையெல்லாம் செய்தும் அவருடைய வாழ்வில் செல்வம் சுவறவில்லை. கதிர்காமருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாசித்தம்பி, சின்னத்தம்பி, சின்னவியார் என்று மூன்று அன்புச் சகோதரர்கள் இருந்தார்கள்.

அவர்களுடைய பொருளாதார வளமும் ஓகோ என்று இருக்கவில்லை. இந்த நிலையில்தான் கதிர்காமு அவர்கள் காலமானார். கதிர்காமுவின் தமையனாரான விநாசித்தம்பி அவர்கள் தமது தம்பியின் பிள்ளைகளை அரவணைத்து ஓரளவுக்கு வழிகாட்டினார். விநாசித்தம்பியாருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். ஆகவே அவராலும் பண உதவி என்று எதையும் செய்ய முடியவில்லை. எனினும் தந்தையில்லையே என்ற குறையை விநாசித்தம்பி அவர்கள் ஓரளவுக்கேனும் நீக்கினார் என்று சொல்லலாம்.

பள்ளிக்கணக்கு என்று அதிகம் தெரியாவிட்டாலும், கதிர்காமு அவர்கள் புள்ளிக்கணக்கு என்ற அனுபவக்கணக்கில் வல்லவராக இருந்தார். அதனால், தாம், அதிகம் கல்லூரிக்கல்வி கற்றிராதபோதும், தமது பிள்ளைகள் கற்க வேண்டும் என்று விடாப்பிடியாக நின்று, தாம் உயிரோடிருக்கும் வரை தமது பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி வந்தார். கதிர்காமு அவர்களின் பிள்ளைகளோ தங்கமான பிள்ளைகள் என்று சொல்லக் கூடியவர்களாக வளர்ந்தார்கள். தகப்பன் உயிரோடிருந்த காலத்திலேயே மூத்த ஆண்பிள்ளைகள் இருவரும் தந்தைக்கு உதவியாக இருந்து, தந்தை செய்து வந்த தொழிலை ஓரளவுக்குக் கற்று வந்தார்கள். ஆகவே தந்தையார் திடீர் என இறந்ததும் தந்தையார் செய்து வந்த பத்திரிகை விநியோகத் தொழில், கடை ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். பாலசுந்தரம் அவர்களின் தாயான சோதிமுத்து அவர்களும் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டி நாலு பணம் சம்பாதிப்பதற்கு வழிகாட்டினார்கள். ஆனால் உழைக்க வேண்டும் என்பதற்காகப் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். அதனால் பிள்ளைகளின் கல்வி ஓரளவுக்கு முட்டின்றித் தொடர்ந்தது. ஆண் சகோதரர்கள் எல்லோருமே ஆங்கிலக் கல்வி கற்று அரசசேவையில் தொழில் பெறக்கூடிய அளவுக்கு உயர்ந்தார்கள்.

மாதனைத் தமிழ்ப் பள்ளிக்கூடம், மருதடி தட்டாதெருத் தமிழ்ப் பள்ளிக்கூடம், வேலாயுதம் ஆங்கிலப் பாடசாலை, ஆட்டிலிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கல்விகற்ற பாலசுந்தரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், அவருடைய பதினாறாவது வயதில் Senior School Certificate Examination என்ற தேர்வில் தேறியபின், இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையிலும் தேறினார். தொடர்ந்து படிப்பதற்கான திறமையும் விருப்பமும் நிறையவே பாலசுந்தரனுக்கு இருந்தன. ஆனாலும் குடும்பச் சுமையும் பெண் சகோதரிகளுக்கான பொறுப்பும் அழுத்தியதால், கல்விக்கு முற்றுப்புள்ளி போட்டு விட்டு உழைப்புக்கான உத்தியோகம் ஒன்றைத் தேடத் தொடங்கினார். கடவுளும் கண்ணைத் திறந்தார். தமது இருபதாவது வயதில்(1943) பாலசுந்தரன் அஞ்சல் திணைக்களத்தில் எழுத்தனாக நியமனம் பெற்றார். அஞ்சல் திணைக்களத்தில் ஊழியம் செய்து பதவியில் உயர முடியாது என்பதை உணர்ந்த பாலசுந்தரன் ஐந்து ஆண்டுகளின் பின்னர் புகையிரத சேவையில் சேர்ந்தார். கண்ணியம் மிக்கவராகவும், கடமை தவறாதவராகவும் இருந்ததால் அவர் புகையிரதத் திணைக்களத்தில் பதவி உயர்வுகள் பெற்று Head Guard என்ற பதவியில் அமர்ந்தார். முப்பத்தைந்து ஆண்டுகள் சேவை செய்த பின்னர் 1983 ஆம் ஆண்டு அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

அமரர் பாலசுந்தரம் அவர்கள் 1952 ஆம் ஆண்டில் தும்பளையைச் சேர்ந்த திருநாவுக்கரசு - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளான புவனேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்தார். கணவன் பால் என்றால், தான் பசும்பால் என்று சொல்லுகின்ற குலக்குடிப்பண்பைப் பெற்றிருந்த புவனேஸ்வரி அவர்கள், பருவதபத்தினி, இராசலிங்கம், இரவீந்திரன், கலைமதி நளினி, குமாரலிங்கம், சிறீசுந்தரலிங்கம், மோகனலிங்கம் சிறீஉமாபதி, பானுமதி என்று ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். ஒன்பது பிள்ளைகளில் மூவர் பெண்கள், அறுவர் ஆண்கள். இறையருளாலும், பாலசுந்தரம், புவனேஸ்வரி ஆகியோரின் பழைய புண்ணிய பயனாலும், பிள்ளைகளின் தளரா ஊக்கத்தினாலும் இவர்கள் எல்லோருமே சமூகத்தால் வேண்டப்படுபவர்களாக இருந்து தாம் பிறந்த குலக்குடியினருக்கும் பிறந்த நாட்டுக்கும் அருந் தொண்டு ஆற்றி வருகின்றார்கள்.

ஆங்கில மொழியோடு தமிழையும் ஆழமாகக் கற்றிருந்த பாலசுந்தரம் அவர்கள் மிகுந்த சமய ஈடுபாடு கொண்டவராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர். தும்பளைபத்திரகாளி அம்மனும் கணையத்தோட்டத்துக் கண்ணகி அம்மனும் பாலசுந்தரம் அவரின் குலதெய்வங்கள். தமக்கிருந்த சமயப்பற்றையும் ஈடுபாட்டையும் தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் தம்முடைய மருமக்களுக்கும் ஊட்டிய பெருமை பாலசுந்தரம் அவர்களுக்கு உரியது.

தமது பிள்ளைகள் தமிழருக்குரிய கலைகலாசாரங்களை மறந்து விடக்கூடாது என்பதால், தேவார திருவாசகங்களைப் பாடக் கற்றுவந்ததோடு தமிழரின் கூத்து, காவடி, கரகம், சிலம்படி ஆகியவற்றிலும் நிறைவான ஆர்வம் காட்டி வந்தவர் பாலசுந்தரம் அவர்கள்.

தமது தந்தையார் காலமான காலத்திலிருந்து தமது தந்தையாரின் நிலையில் அமர்ந்து தமக்கு ஆதரவளித்து அறிவூட்டிய பெரியப்புவான விநாசித்தம்பி அவர்களைப் பாலசுந்தரம் அவர்கள் ஆழமாக நேசித்தார். குற்றம் பார்க்கில் சுற்றமில்லை என்ற பழமொழியில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர் விநாசித்தம்பி. அந்த உயர்ந்த பண்பு பாலசுந்தரம் அவர்களிடம் நிறையவே இருந்தது. சுற்றத்துக்கு அழகு சூழ இருந்தல் என்பதில் பாலசுந்தரம் அவர்கள் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். இதனால் கணையந்தோட்டத்தில் வாழ்ந்த ஆழ்வாரின் வழிவந்த உறவுகள் அனைவரோடும் அறுக்க முடியாத தொடர்பைப் பேணிவந்தார் பாலசுந்தரம் அவர்கள். அந்தப்பண்பு அவர்கள் ஈன்ற ஒன்பது பிள்ளைகளிலும் சுவறிக்கிடக்கின்றது. தனக்கென வாழாது தமர்களுக்காகவும் வாழ்ந்து நிறைவாழ்வை நிறைவு செய்த பாலசுந்தரனின் உடல் மறைந்தாலும் அவருடைய உயிர் நமக்கு வழங்கிய நல்லுரைகளும் நல்லனுபவங்களும் நமக்கு வழிகாட்டட்டும் என்று கூறி மகிழ்வோம். அவரின் வாழ்க்கை நினைவுகளைக் கொண்டாடுவோம். அவர் மீண்டும் நம் மத்தியில் வந்து பிறப்பார் என்ற தமிழ்ச் சிவச்சிந்தாத்தை நம்புவோம்.

வாழ்க பாலசுந்தரம் புகழ்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பெருமிதம்

அன்பையும், தமிழ்ப் பண்பையும் அடையாளப்படுத்தும் " வணக்கம்" சொல்லும் வழக்கத்தை எமக்குப் பழக்கப்படுத்திய எங்கள் வணக்கத்துக்குரிய ஐயாவே!

மனித வாழ்வியலின் முக்கிய கோட்பாடுகளான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்த மாண்புமிக்க மனிதர் நீங்கள்!

வாழ்க்கைப் பாதையின் கரடு முரணான தருணங்களையும் கலங்காது எதிர்கொண்டு வெற்றிகண்ட மாவீர் நீங்கள்!

நடை நடையாய் நடந்து ஓயாமல் உழைத்த கர்மவீரர் நீங்கள்! சமயம், மொழி, சமூகம், குடும்பம் என்று எதிலும் குறைவின்றிப் பணியாற்றிய நிறைவான மனிதர் நீங்கள்!

முதுமையின் இறுதிப்பகுதியில் சலிப்பின்றி உடல் உபாதைகளை உங்கள் இயல்பான மனவைராக்கியத்தால் தாங்கி, அமைதியான முகத்தோடு மரணத்தை எதிர்கொண்ட மகாஞானி நீங்கள்!

மொத்தத்தில் உங்கள் "வாழ்க்கைப்பயணம்" எம் எல்லோருக்கும் படித்துப் பயன்பெறவேண்டிய வாழ்க்கை வழி நூலகமாக உணர்கிறோம், போற்றுகிறோம்!

உங்கள் நினைவலைகள் எம்மனதில் முட்டி மோதி மழையெனப் பொழியும் கண்ணீரைக் காணிக்கையாக்கி வணங்குகிறோம்.

உங்கள் புனித ஆன்மா இறைநிழலில் இன்புற்றிருக்க நாம் அனைவரும் பிரார்த்திக்கிறோம்!

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் உணர்வுத்துளிகள்

அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை. தன்னலமும் தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக ஆக்கி விடுகிறது. இத்தன்மை உள்ள ஒரு மனிதராக நாம் அப்பப்பாவைப் பார்க்கின்றோம்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிட்டார். அவருடைய தாயார் இளவயது விதவை. சகோதரர் முதல் தாயார் வரை உள்ள விடயங்களை அப்பப்பா கவனித்துக் கொண்டார். தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் தன்னைத்தானே செதுக்கும் ஒரு சிற்பியாக வாழ்ந்திருக்கின்றார். அவருடன் நாம் கதைத்த காலங்களில் இவற்றை உணர்ந்திருக்கின்றோம். மிகவும் கண்டிப்பான கொள்கைகளைத் தனக்குள் கொண்டிருப்பவராக அவரைப் பார்த்திருக்கின்றோம். எவ்வளவு கோபம் வரக்கூடிய செயலாக இருந்தாலும் தன் கருத்தைத் தொனி உயர்வு இல்லாமல் தெளிவாகக் கூறுவார். எமக்கு வியப்புக்குரிய விடயமாக இருப்பவற்றில் இதுவும் ஒன்று.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற பாடலைப் பார்க்கும்போது, அப்பம்மாவுடன் அவர் வாழ்ந்த 65 வருட வாழ்க்கை நிறைவு, அவர் பிள்ளைகளை அவர் வளர்த்துவிட்ட தன்மை எல்லாம், இப்பாடல் அவருக்காகத்தான் எழுதப்பட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

அவரது 60ஆவது திருமண நிறைவு நாளில் சகோதரர்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும், விட்டுக்கொடுத்தல் உணர்வோடும் இருக்கவேண்டும் என்பதே அவரது உரையாடலாக இருந்தது. அவரது வேண்டுகோளை எப்போதும் நினைவில் கொள்வோம்.

அப்பம்மாவுடன் அவர் கதைப்பதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அப்பம்மா தன் உடல் சுகவீனங்களைப் பற்றி அவருடன் கதைப்பார். அப்பம்மாவை அவர் பிள்ளை என்றுதான் கூப்பிடுவார். "பிள்ளை அதெல்லாம் சரிவரும்" என்ற ஆறுதல் வார்த்தைகள்தான் அவரிடருந்து வரும். "எல்லாம் சரிவரும்" என்ற நிலைப்பாடு எப்போதும் அவரிடம் இருக்கும். இதில் அப்பப்பாவின் சிறப்பு என்னவென்றால் இவரது நோக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இவரது சிறப்பியல்புகள் இவரோடு மட்டுமல்லாமல் அடுத்த அடுத்த தலைமுறைகளுக்கும் செல்லவேண்டும் என்ற சிந்தனைதான்.

அவரது ஆறுதல் வார்த்தையை இழந்து தவிக்கும் அப்பம்மாவிற்கு நாங்கள் எப்படி ஆறுதல் கூறுவோம்? அப்பம்மா! அப்பப்பா எங்கள் எல்லோர் உணர்வுகளிலும் கலந்துவிட்டார். அவர் என்றென்றும் உங்களுக்குள்தான் இருக்கின்றார். உங்களுக்குள்தான் இருக்கின்றார். உங்களுக்காகத்தான், தான் நேசித்த தமிழ் மண்ணை விட்டு வந்தார். உங்களைத் தன் பிள்ளைகளிடம் தந்துவிட்டுத்தான் அமைதி அடைந்துள்ளார். அப்பம்மா கலங்காதீர்கள். நாங்கள் இருக்கின்றோம்.

**-பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனரின் மனங்குழைந்த வார்த்தைகள்

எம் நெஞ்சத்தை விட்டு அகலாத பாசமுள்ள அன்பு அத்தானே!

"ஆசை அத்தான் அன்பு அத்தான்
அரவணைக்கும் நேச அத்தான்
பாசமுறை நல்ல அத்தான்
பாங்கான உறவு அத்தான்
நேசமாம் நாம் புலம்ப
நிலைமாறிச் சென்ற தென்ன?
மாசில்லா அத்தானே
மாற்றிடுமோ எம் துயரம்?

எங்கள் குடும்ப விளக்காக ஒளிதந்த எமதருமை அத்தானே! எமது தாய் தந்தையரக்கும் மேலாக உம்மீது மிகுந்த பாசம் வைத்து , எமது கல்வியறிவு, ஒழுக்கங்கள், ஆலய வழிபாடு ஆகியவற்றில் மேம்பாடடையச் செய்து அன்றாடம் உழைத்து வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடித்தந்து எம்மை இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்தி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் இனிது மகிழ்ச்சியுடன் வாழ வைத்து, எமது பேரப்பிள்ளைகளுக்கும் இளமையில் நல்லறிவைப் புகட்டி அவர்கள் இன்றைக்கும் தங்களை "வணக்கம் பாட்டா" என மிகுந்த பாசத்துடன் அழைக்குமளவுக்கு அவர்களின் இதயத்தில் கலந்து கொண்டுள்ளீர்கள்.

எங்கள் குடும்பத்திற்காகவே எமது குலதெய்வங்களான நெல்லண்டை அம்மன், முத்துமாரி, முருகன் ஆகிய தெய்வங்கள் எமக்கு வழங்கிய சொத்து எமது பாசமிகு அத்தானே. வயோதிபம் காரணமாகத் தொடர்ந்து எமது குடும்பத்திற்குச் சுமைதாங்கியாக இருந்தது போதுமென எண்ணிய எமது குலதெய்வங்கள் தங்களோடு இணைத்துக் கொண்டார்களென ஒருவாறு பிரிவை எண்ணி ஆறுதல் அடைவதோடு, உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எமது குலதெய்வங்களை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

வணக்கம்
உங்கள் நினைவுடன்
**பாசமிகு மைத்துனர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்

**வே.தியானந்தராசாக்குருக்கள்**
பிரதமகுரு
தும்பளை தம்புருவளை தேவஸ்தானம்,
தும்பளை ஸ்ரீவரத விநாயகர் தேவஸ்தானம்,
தும்பளை முருகையன் கோயில்



நெல்லண்டை
தும்பளை
பருத்தித்துறை.

## அனுதாபச் செய்தி

அமரர் கதிர்காமு-பாலசுந்தரம் அவர்களின் மறைவு எமக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னார் தும்பளையில் இருந்த காலத்தில் தமது குலதெய்வங்களாகிய நெல்லண்டை பத்திரகாளி, நெல்லண்டை முத்துமாரி, தும்பளை முருகன் ஆகிய ஆலயங்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி உள்ளார். அன்னார் முருகன் கோவிலின் கந்தபுராணப் படிப்பையும் ஒருமுறை அரங்கேற்றி வைத்தார்.
இவ்வாலயங்களில் நிர்வாகப் பணியையும் ஏற்றுச் சிறப்பாக நடாத்தியிருந்தார். அன்னார் தன்னுடைய அரசபணியாற்றி ஓய்வு பெற்றவுடன் பல ஆலயங்களில் தனது தொண்டுகளை ஆற்றி இறுதியில் புலம்பெயர்ந்த நாட்டிலும் தனது பணிகளைச் செய்து வந்தார்.
எனவே இவருடைய மறைவு எமக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபம்

இங்கனம்
**வே.தியானந்தராசக்குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Deshamanya Sava Raveeindiran J.P.U.M**
Attorney – at Law, Notary Public
Legal Adviser, Justice of the Peace
And UN-Official Magistrate

Office:
Sivan Kovil View,
Point Pedro,
Sri Lanka.
Tel: 021 226 3002

## சபா ரவீந்திரன் அவர்களின் நன்றி உரை

அமரர் கதிர்காமு பாலசுந்தரம் அவர்கள், தும்பளை வாழ் மக்கள் மத்தியில், அயராது நற்பணியாற்றி, உயர்ந்த நிலையில் வாழ்ந்து, மகத்தான ஒரு வழிகாட்டிய விளங்குகி எமது பகுதியில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் ஒரு தொண்டராகச் செயற்பட்டு, ஏனையவர்களையும் தொண்டாற்ற ஊக்குவித்து, மக்கள் பணியாற்றி, தனது தொண்ணூற்றைந்தாவது அகவையில் இறைபதமடைந்த அன்னாரின் சேவையை எமது ஊர்மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். ஐயாவின் சமய, சமூகப் பணிகளுக்கு மேலாக, குடும்பங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளைக் கூட, தனது சமயோசித செயற்பாடு மற்றும், பெறுமதியான ஆலோசனைகள் மூலம் தீர்த்து வைப்பதில் மனம் சளைக்காமல், நேரம் பாராது ஆற்றிய சேவைகள் மிகப் பெறுமதி வாய்ந்தவையாகும்.
பாலசுந்தரம் ஐயா அவர்கள், நான் இன்று பணியாற்றும் சகல விடயங்களுக்கும் எனக்கு உந்து சக்தியாக இருந்து வந்துள்ளதை நான் பெருமையுடன் குறிப்பிடல் வேண்டும். சைக்கிள் ஒன்றிலேயே ஓய்வின்றி ஓடித்திரிந்து அவர் ஆற்றியுள்ள அளப்பரிய பணிகளை, வேறு எவருமே செய்ய முடியாது. பணியாற்றுவதில் இவர் பிரதிபலன் எதனையும் தனக்கு எதிர்பார்க்க மாட்டார். மக்கள் நலன், சமுதாய உயர்வு என்பனவே அவரது குறிக்கோளாக இருந்து வந்துள்ளன. அவர் தான் மட்டுமல்ல, தனக்குப் பின் தன் பிள்ளைகளும், குடும்பமும் தன் பணியினைத் தொடரப் பழக்கப்படுத்தி விட்டு, எம்மைவிட்டு நெல்லண்டை அம்மன் திருப்பாதம் சென்றடைந்து விட்டார்.
அவரின் ஆன்மா சாந்தியடைய எம் இத்திமரத்தாள் நெல்லண்டைப் பத்திரகாளியைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சபா ரவீந்திரன் J.P.U.M,
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்,
தலைவர், தும்பளை நெல்லண்டை அம்மன்
கோவில் தர்ம பரிபாலன சபை.
தலைவர், தும்பளை கிழக்கு சனசமூக நிலையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Annai Poopathi Tamilsk Kultursenter- Bergen**

**அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - பேர்கன்**

# வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்

கம்பீரமான தோற்றம், கனிவான குரல், அனைவரையும் மதித்து, அன்பாக உரையாடும் தன்மை... இவ்வாறுதான் பாலசுந்தரம் ஐயா அவர்கள் பேர்கனில் அறிமுகமானார். நண்பர்களின் அழைப்பில் அவர் பேர்கனுக்குத் தனது பழுத்த வயதில் வாழ வரும்போது, அவருக்கு எண்பது வயதுக்கு மேலேயாகியிருந்தபோதிலும், எம் இனம் சார்ந்த, மொழி சார்ந்த, எமது பாரம்பரியங்கள், குடும்ப உறவுகள் சம்பந்தமான திடமான பார்வையும், தெளிவான சிந்தனையும் அவரிடம் இருந்தன. அதுபற்றித் தெளிவாகக் கலந்துரையாடும் ஆளுமையும் அவரிடம் நிறைந்திருந்தது.

புலம்பெயர் சூழலில் பிறந்து வளரும் எம் இளம் சமூகம் தாய்மொழியாம் தமிழை, தமது உரையாடல் மொழியாகக் கட்டாயம் பயன்படுத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த பாலசுந்தரம் ஐயா அவர்கள், தனது குடும்பத்து இளையோர் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் தீவிரமான கவனம் செலுத்தியிருக்கிறார். இருமொழிச் சூழலில் வளரும் எமது இளையோர் தமது தாய் மொழி பயன்பாடு சம்பந்தமாய்க் குடும்பத்தலைவர்கள் திடமான, இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்கு ஐயாவின் வாழ்வு ஒரு நல்ல உதாரணமாகும்.

பாலசந்தரம் ஐயா அவர்கள், தான் கொண்ட இறைநம்பிக்கையில் உறுதியாக இருந்ததோடல்லாமல், தனது சந்ததியும் எமது கலாச்சார விழுமியங்களையும் கட்டுக்கோப்புக்களையும் பேணவேண்டுமென்பதில் திடமாக இருந்தார். தான் சார்ந்த சைவத்தின் வாழ்வியலுக்குத் தேவையான ஆழ்ந்த கருத்துக்களை விளக்கமாகத் தெரிந்திருந்தார். அன்னாரது வழிவந்த அவரது இளம் சந்ததியினர் தமிழ்மொழி, கலைகள் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டுவதற்கும், தமிழ்ப்பாரம்பரியங்களை ஈடுபாட்டுடன் பின்பற்றி வளர்ந்து வருவதற்கும், அவருடைய வழிகாட்டலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுக்காத உறுதியுமே காரணம் என்பது திண்ணம். தமிழினத்தின விடிவிற்காய் அவரது சந்ததியினர் அயராது ஆற்றும் பணிகளுக்கு, பாலசுந்தரம் ஐயா அவர்களின் கொண்ட கொள்கையில் விட்டுக் கொடுக்காத நியாயமான போக்கு, நிச்சயமாக ஒரு உந்து சக்தியாயிருக்கும்.

எமது பேர்கன் அன்னை பூபதி வளாகத்துடன் தொடர்ந்து இணைந்திருந்தது, எமது எதிர்காலச் சமூகத்துக்காகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் ஐயாவின் சந்ததியினரின் துக்கத்தில் அன்னை பூபதி வளாகமும் பங்கு கொள்கிறது. வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, ஒரு மனிதன் தனது குடும்பத்துக்காக, சமூகத்துக்காக, எவ்வாறு ஒழுக்கமாகவும், தியாகத்துடனும், கொள்ளையில் திடமாகவும் வாழவேண்டுமென்பதைப் பூரணமாக வாழ்ந்து காட்டி, மறைந்த பாலசுந்தரம் ஐயா அவர்களின் வாழ்வு அனைவருக்கும் முன்னுதாரணமானது.

அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த இரங்கல்கள்!

**வே. தயாளன்**
**அதிபர், அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம், பேர்கன், நோர்வே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபை**
**Thumpalai Nellandai Amman Temple: Board of Trustees**

தும்பளை Thumpalai | ஸ்தாபிதம் Est: 31.05.1945 No: HA/5/JA/419 | பருத்தித்துறை Pointpedro

(தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், தும்பளை முருகன் கோவில், தும்பளை முத்துமாரி அம்மன் கோவில், தும்பளை நெல்லண்டை அம்மன் திருமண மண்டபம், தும்பளை இந்து நூல் நிலையம், நெல்லண்டை அம்மன் அறநெறிப்பாடசாலை, அந்தியேட்டி மடம், ஆகியவற்றை பரிபாலனஞ் செய்யும் சபை)

சபா. ரவீந்திரன் தலைவர் / President | கா.புஸ்பராஜா செயலாளர் / Secretary | ஆ.சிவகுமாரன் பொருளாளர்/Treasurer

பரு/தேசிய சேமிப்பு வங்கி க/இல: 1-0032-01-34210. கோவில் தொலைபேசி இல: 021205 6060

## புராணப்படிப்பை ஊக்கிய பண்பாளன்

எமது சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், தும்பளை முத்துமாரி அம்மன் கோவில், தும்பளை முருகன் கோவில் ஆகிய கோவில்களிலும் பாலசுந்தரம் ஐயா அவர்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஆற்றிய திருத்தொண்டுகள் அளவிட முடியாதன. இவரது பணியிலேயே எம் மூன்று கோவில்களும் அதிக சிறப்பையும் வளர்ச்சியையும், முக்கியத்துவத்தையும் பெற்றன.

நிர்வாகசபை உறுப்பினர்களிடையே ஒற்றுமையை வலியுறுத்துவதிலும், பொதுச்சபைக் கூட்டத்தில், ஸ்திரமான – திறமையான நிர்வாகத்தை அமைப்பதிலும் இவரது வியூகம் மிகப்பெறுமதி வாய்ந்ததாகும். கந்தபுராணப் படிப்புக் காலத்தில் அறுபது நாட்களும், கோவிலிலேயே நின்று, “படிப்பு மற்றும் பயன் சொல்லல்” நிகழ்வை மிகச் சிறப்பாக ஒழுங்கமைப்பதில் வல்லவராக விளங்கினார். இளைஞர்கள் உட்பட நாங்கள் அனைவரும் புராணப் படிப்பில் ஈடுபட இவரே வழிகாட்டினார். பாலசுந்தரம் ஐயாவின் அறப்பணியை யாருமே ஈடு செய்ய முடியாது. ஐயாவின் பணிகளை அவரது பிள்ளைகளும் தொடர அன்புடன் அழைக்கின்றோம்.

**நிர்வாக சபை**
**தும்பளை நெல்லண்டை அம்மன்**
**கோவில் தர்மபரிபாலன சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM RETIRED RAILWAY EMPLOYEES ASSOCIATION IN CANADA

For one who has conquered the mind, the supersoul is already reached, for he has attained tranquility; to such a man happiness and distress, heat and cold, honour and dishonour are all the same.

(Gita chapter 1, text 7)

Mr. Balasundaram lived according to Gita's eachings. When I was Welfare officer in Anuradhapura division, in 1970, I had the opportunity of meeting him. That time, he was attached to Trincomalee station. He was a simple, honest, and sincere worker. Even though he had a big family, he was never greedy.He worked more than thirty five years in different stations, such as KKS, Anuradhapura, Colombo, Talaimannar, Trincomalee and Maho. He always liked to meet passengers, railway staff. He was very friendly with his fellow officers, station staff, superior officers, his assistants and railway passengers.

When he visited Canada, about twenty years ago, about hundred railway family members and his close relatives, got together and gave a dinner in his honour. He was very happy. After he had left Canada, he wrote few letters from Norway.His son Ravi told us, whenever he spoke to him, that he always inquired about the well being of his former Railway associates.

May almighty bless Mr. Balasundaram's soul and his family.

OM SHANTI

Thank you,

**Rajah Balendra,**
**President**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரார்த்தனை உரை

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையும் காணேனடி – தூங்காமல்
தூங்கும் சுகமே வந்து வாய்த்தது
சும்மா இருந்தேனடி – அது
அம்மாவின் அடியே அடி

என்றபடி நாம் இருப்பதற்குக் காரணம் அன்னை அடித்தாமரைகள். இதன்பால் சரண் புகுந்து வாழ்வதற்கு வழிவகுப்பது பக்தி வைராக்கியம், இதனைப் பெறுவதற்கு வழிவகுத்துத் தந்தவர் அன்பர் என் மதிப்பிற்குரிய கதிர்காமு பாலசுந்தரம் அப்பா. என்னையும் எனது தம்பி வேதையா குருக்கள்(குரு) என்ற இருவரையும் குருப்பட்டாபிஷேகம் செய்வித்து ஆலய அர்ச்சனையில் பங்கு பற்றச் செய்தவர் என்ற பெருமையும் அவருக்குண்டு.

1980க்கு முந்தியும் பிந்தியும் எமக்குப் பலதரப்பட்ட ஆதரவு தந்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார். கதிரவேற்பிள்ளை, வீரகத்திப்பிள்ளை, சி.மு கந்தசாமி, வடிவேலு அப்பா, அவர்களுக்குப்பின் ச.கு. அம்பலவாணபிள்ளையுடன் இணைந்து கோவில் தொண்டுகள் செய்தவர்களில் மிகவும் பிரதானமான இடத்தைப் பிடித்தவர்; எழுந்தருளி விக்கிரகங்கள் பிள்ளையார், முருகன்-வள்ளி-தெய்வானை வைக்க வேண்டும் என நின்று அதனையும் எங்கள் காலத்தில் வைத்தவர்.

கந்தபுராணபடனம் படித்தல், பயன் சொல்லுதல் என்ற வகையிலும், எனது பட்டப்படிப்புக்கும் உதவிகள் செய்தவர். மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அம்பிகைக்கு ருத்திரா அபிஷேகம் செய்து நித்தியமாகச் செவ்வாய்கிழமை அபிஷேகங்கள் செய்தவர். அந்த நாட்களை எண்ணிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்றேன். நன்மைகள், தீமைகள் இரண்டிலும் கலந்து கொண்டவர்.

எந்தக் காரியத்தையும் நிதானமுடன் அமைதியாக உணர்ச்சிவசப்படாமல் தமது கருமங்களையும் ஆற்றியவர். இனிமையான தேவார திருவாசகங்கள் பாடி மக்களையும், எம்மையும் பக்திப்பரவசத்தில் திளைக்க வைத்தவர், இனியவர், நல்லவர்.

திருநாவுக்கரசுவின் மூத்த மருமகன். இவர்களின் வீட்டில் (வல்லியார் வளவு) வைத்தே தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த வேள்விப் பொங்கலுக்கான மடைப்பண்டம் எடுக்கும் வைபவம் நடைபெறும் அந்தக்காலத்தையும் எனக்கு நன்றாகத் தெரியும்.

பார்வதபத்தினி, இராசலிங்கம், இரவீந்திரன், குமாரலிங்கம், ஸ்ரீசுந்தரலிங்கம், கலைமதி நளினி அடுத்து எமது சகபாடி மோகனலிங்கம், ஸ்ரீஉமாபதி, பானுமதியுடன் ஒன்பது பிள்ளைகளையும் 33 பேரப்பிள்ளைகளையும், 23 பூட்டப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்று இனிது நெல்லண்டை பத்திரகாளி அம்மன் மீது மீளா அடிமை கொண்டு (13.07.2017) அன்று இறைபதமடைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் துணுக்குற்றோம். முகநூல் மூலம் அறிந்தோம். பின் அவர் மைத்துனர் ஜெகசோதி (பொன்னப்பா) மூலம் அறிந்து துன்பத்தில் கலந்து கொண்டோம்.

எட்டாத கொப்புக்கு ஏணிவைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசை செய்தேன் தங்கமே!
முன்னுமில்லைப் பின்னுமில்லை
அட்டாங்க யோகம் விட்டேன்.
மட்டாரும் குழலாளே – தங்கமே
மருமமெல்லாம் கண்டேனடி

**(நற்சிந்தனை)**

**சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள்**
தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்
பிரதம குரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் அளிக்கும் இலக்கியப்பாடல்கள்

## திருக்குறள்

(1) "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

(2) "நெருநல் உளன்ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு"

(3) "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்"

(4) "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

(5) "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கள் பேறு"

(6) "பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உலா"

## திருமந்திரம்

(1) அடப் பண்ணிவைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே
(148)

(2) வளத்து இடை முற்றத்து ஓர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பார்
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) "ஆசை அறுமின்கள் ஆசை ஆறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தம் ஆமே"

## நாலடியார்

(1) துகள்நீர் பெரும் செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகரு நடந்த கூழ் பல்லாரோடு உண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக் கால் போல வரும்

(2) புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன் இனியே செய்க அறவினை இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேள் அலறச்
சென்றான் எனப்படுதலால்

(3) காலோடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலோடு மீனின் பலராவர் - ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்

(4) குஞ்சி அழகும் கொடும் தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு

(5) யானை அனையவர் நண்பு ஓர்இ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

(6) செறுத்தோறு உடைப்பினும் செம்புனலோடு ஊடார்
மறுத்தும் சிறை செய்வார் போல நீர்நசைஇ
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு

(7) இன்னா செயினும் விடுதற்கு அரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண் குத்திற்று என்றுதம் கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வு அஞ்சி
மன்றைய ராவார் பகர்வர் பனையின் மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி

## பழமொழி நானூறு

(1) பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் - நல்லாய
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும் தன் வாயால் கெடும்

(2) வழங்கலும் துய்த்தலும் தேற்றாதன் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்து உதிரும் வெற்ப! அதுவன்றோ
நாய் பெற்ற தெங்கம்பழம்

(3) உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள் வாய்க் கேட்பது நன்றே – விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப்புனல் ஊர!
தாய்மிதித்து ஆகாமுடம்

(4) இரப்பவர்க்கு ஈயக் குறைபடும் என்று எண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ – பரப்பின்
துறைத்தோணி நின்றுலாம் தூங்கு நீர்ச் சேர்ப்ப
இறைத்தோறும் ஊறும் கிணறு

(5) பல நாளும் ஆற்றார் எனினும் அறத்தைச்
சில நாள் சிறந்தவற்றால் செய்க – முலைநெருங்கி
நைவது போலும் நுசுப்பினாய் நல் அறம்
செய்வது செய்யாது கேள் - (134)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டலகேசி

(1) பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் இன்னே
மேல்வரும் மூப்புமாகி
நாளுநாள் சாகின் றாமால்
நமக்கு நாம் அழாத தென்னோ

## சீவக சிந்தாமணி

(2) பேதைமை என்னும் வித்தில்
பிறந்துபின் வினைகள் என்னும்
வேதனை மரங்கள் நாறி
வேட்கை வேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்பும் என்னும்
கவடுவிட்டு அவலம் பூத்து
மாதுயர் இடும்பை காயத்து
மரணமே கனியும் அன்றே

## நான்மணிக்கடிகை

சாவாத இல்லைப் பிறந்த உயிர் எல்லாம்
தாவாத இல்லை வலிகளும் - மூவா
இளமை இயைந்தாரும் இல்லை வளமையில்
கேடின்றிச் சென்றாரும் இல்.

## மணிமேகலை

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பராமாயணம்

(1) தீயவை செய்வா ராகில்
சிறந்தவர் பிறந்த உற்றார்
தாய், அவை, தந்தைமார் என்று
உணர்வரோ தருமம் பார்ப்பார்
தீயவை அறிதி அன்றே
நினக்கு யான் உரைப்பது என்னோ
தூயவை துணிந்த போது
பழிவந்து தொடர்வ துண்டோ
(விபீடணன்)

(2) நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர் கொடாது அங்குப் போகேன்
தார்க் கோல மேனி மைந்த
என்துயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனியானைக்
கூடுதி கடிதின் என்றான்
(கும்பகருணன்)

## கந்தபுராணம்

(1) ஊன் ஆகி ஊனுள் உயிராய்
உயிர் தோறும் ஆகி
வானாதியான பொருளாய்
மதியாகி வெய்யோன்
தானாகி ஆண்பெண்
உருவாகிச் சராச ரங்கள்
ஆனான் சிவன் மற்றவன்நீள்
கழற்கு அன்பு செய்வாம்

(2) மண்ணுல கத்தினில்
பிறவி மாசற
எண்ணிய பொருள் எல்லாம்
எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர்
களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி
பணிந்து போற்றுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளவெண்பா

(1) காதல் கவறாடல் கள்ளுண்டல்
பொய்ம் மொழிதல்
ஈதல் மறுத்தல் இவை கண்டாய் - போதில்
சினை ஆமைவைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி

(2) உருஅழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருஅழிக்கும் மானம் சிதைக்கும் - மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து

(3) குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ – கொற்றவனே
கோக்காதலனைக் குலமகளுக்கு என்று உரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து

(4) பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனும் உடையரோ - இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்

# அவ்வையார் பாடல்

(1) கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு
உற்ற கலை மடந்தை ஓதுகிறாள் - மெத்த
வெறும் பந்தயம் கூற வேண்டாம் புலவீர்
எறும்பும் தன்கையால் எண்சாண்

(2) ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்
எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

(3) வான் குருவியின் கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொலவேண்டாம் காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஞான சித்தியார (அருணந்தி தேவர்)

யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்
வருவர்மற் றத்தெய்வங்கள்
வேதனைப் படும்இறக்கும்
பிறக்கும்மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவை இலாதான்
அறிந்தருள் செய்வனன்றே

## பட்டினத்தார்

(1) பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே

(2) கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர்

ஆசைக்கோர் அளவில்லை
அகிலமெலாம் கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆணை செலவே நினைவர்
அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்தபேரும்

நேசித்து ரசவாத
வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வேயினும்
காயகற்பம் தேடி
நெஞ்சு புண்ணாவர் எல்லாம்

யோசிக்கும் வேளையில்
பசிதீர உண்பதுவும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும்
நான்நான் எனக் குளறியே
ஒன்றை விட்டு
ஒன்று பற்றிப்

பாசக் கடற்குள்ளே
வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்கும் இடம் எங்குமொரு
நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

# சித்தர் பாடல்

(1) காலை மாலை நீரிலே முழுகும் அந்த மூடர்கள்
காலைமாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்?
காலமே எழுந்திருந்து கண்கண் மூன்றில் ஒன்றினால்
மூலமே நினைப்பிராகில் முத்திசித்தி ஆகுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) எங்கள் தேவா் உங்கள் தேவா் என்றிரண்டு தேவரோ
இங்கும் அங்குமாய் இரண்டு தேவரே இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ
வங்கவாரம் சொன்ன பேர்கள் வாய்புழுத்து மாள்வரே

## உண்மை விளக்கம்

தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு

(மனவாசகம் கடந்தார்)

## கந்தபுராணம் (கச்சியப்பர்)

(1) கோலமா மஞ்சை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள்
பரிசிவை உணர்ந்திலேன் யான்
மால் அயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ!

(2) ஏதமில் அமரர் தம்மை
யான் சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர்
அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை
விண்ணவர் பலரும் காணா
நாதனிங் கணுகப் பெற்றேன்
நன்றதே யானதன்றே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளையாபதி

வினைபல வலியினாலே
வேறுவேறு யாக்கை ஆகி
நனிபல பிறவி தன்னுள்
துன்புறும் நல்லுயிர்க்கு
மனிதரின் அரியதாகும்
தோன்றுதல் தோன்றினாலும்
இனியவை நுகரஎய்தும்
செல்வமும் அன்னதாமே

## பாரதியார் பாடல்

## காளிப்பாட்டு

யாதுமாகி நின்றாய் காளி! எங்கும் நீ நிறைந்தாய்!
தீது நன்மை யெல்லாம்- காளி! தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்தும் ஆனாய்- காளி! பொறிக ளைந்தும், ஆனாய்
போத மாகி நின்றாய்- காளி- பொறியை விஞ்சி நின்றாய்

இன்ப மாகி விட்டாய்-காளி-என்னுளே - புகுந்தாய்!
பின்பு நின்னை யல்லால் - காளி! பிறிது நானும் உண்டோ?
அன்ப ளித்து விட்டாய் - காளி!- ஆண்மை தந்துவிட்டாய்,
துன்பம் நீக்கி விட்டாய் - காளி- தொல்லை போக்கிவிட்டாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் **திரு கதிர்காமு பாலசுந்தரம்** அவர்களின் அமரத்துவத்தால் ஏற்பட்ட தாங்கொணாத் துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர், அனுதாபங் களைத் தெரிவித்து அளவற்ற அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், உற்ற நேரத்தில் உதவிகள் புரிந்தவர்களுக்கும், இம்மலரினை அழகுற வடிவமைத்து அச்சுப்பதிவு செய்த ஜே.ஆர். அச்சகத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதுமூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

(புறநானூறு – 192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*" Any country is our country*
*Any person is our kin*
*Pain and pleasure*
*Come not from others*
*Same is true with*
*Suffering and cure*
*Death is but natural*
*We don't rejoice when*
*Life tastes sweet*
*Nor do we fret*
*When it turns miserable*
*Clear as we are*
*From the divination*
*Of our ancients great*
*That our souls*
*Follow a course*
*Charted already,*
*Like a boat that*
*Follows the path of the water*
*In a fast moving long river*
*That gushes and crashes*
*The rocks that block its course*
*After a down pour*
*Accompanied by thunder and lightning.*
*We idolize not anyone*
*Because they are great,*
*Nor disparage anyone*
*As they are infamous "*

*~ Purananuru - 192*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print www.jrprint.com T: 0208 503 6643